Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# கோயில் சிற்பங்கள் - நின்ற நாராயணப் பெருமாள் கோவில்

**ச.நிஷா , ச.ராஜ ஸ்ரீ & வீ. கோபிநாத்,**
**உளவியல் துறை உதவிப் பேராசிரியர்**
**பூ. சா. கோ அர. கிருட்டிணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை**

14

**ஆய்வு நோக்கம்** :

சிறப்புமிக்க குடைவரைக் கோவில்களில் ஒன்று தான் விருதுநகர் மாவட்டத்தின் திருத்தங்கலில் உள்ள " நின்ற நாராயணப்பெருமாள் திருக்கோவில்". 108 திவ்ய தலங்களில் 48 வது வைணவ திருத்தலமாக கருதப்படும் இந்த புண்ணிய ஸ்தலத்தினுடைய சிறப்பை பற்றி ஆராய்வதே இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கம்

**ஆய்வு சுருக்கம் :**

செதுக்க செதுக்க தான் சிற்பம். கண்களால் பார்த்தவற்றையும், கற்பனை உருவங்களையும் சிற்பக்கலை காட்சிக்கு அளிக்கிறது. அது அழகான காட்சிப் பொருளாக மட்டுமில்லாமல் கருத்து, உணர்ச்சி, மரபுகளை எடுத்துரைக்கிறது. காலந்தோறும் சிற்பங்களின் அம்சங்கள் மன்னர்களின் ஆட்சிக்கேற்ப மாறுகிறது. மலைகளை குடைந்து அமைக்கப்படும் கோவில்களை குடைவரைக் கோவில் என்பர். இது சிற்பக்கலையின் ஒரு வகையில் அடங்கும். அவற்றுள் ஒன்று தான் திருத்தங்கலில் உள்ள ஸ்ரீ நின்ற நாராயணப் பெருமாள் கோவில். பெருமாளை மூலவராக கொண்டுள்ள இந்த கோவிலின் சிறப்புகளைப் பற்றியது இக்கட்டுரை.

**முன்னுரை**

"வாழ்க்கையில் அழகு அழிகிறது , ஆனால் கலையில் அழகு அழியாது".சிற்பக் கலை தொன்மையான கலைகளில் ஒன்றாக அனைவராலும் போற்றப்படுகிறது. பண்டைக்காலம் முதலே தமிழர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட கலை இது . தமிழ்நாடு ; சோழர்கள், சேரர்கள், பாண்டியர்கள், பல்லவர்கள் ஆகிய நான்கு மன்னர் வழி மரபின் ஆட்சிக்கு உட்பட்டது. தமிழ்நாட்டில் 30,000 மேல் பழமையான கோயில்கள் உள்ளன அவை குறைந்தது 700 முதல் 2000 ஆண்டுகள் பழமையானது என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. கற்காலத்தில், மனிதன் தன்னை விலங்குகளிடமிருந்து காப்பாற்றிக்கொள்ள ஆயுதமாக கூர்மையாக்கிய கற்களை பயன்படுத்தினான். இதுவே மனித வாழ்வில் சிற்பக்கலையின் தொடக்கமாக அமைந்தது.

'***கல்லும் உலோகமும் செங்கலும் மரமும்***
***மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்***
***கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை***
***பத்தே சிற்பத் தொழிற்குறுப் பாவன***

- திவாகர நிகண்டு

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

இவையே சிற்பம் செய்ய தேவைப்படும் பொருட்கள் என திவாகர நிகண்டு கூறுகிறது இவ்வாறு நாகரிக வளர்ச்சியோடு சேர்ந்து சிற்பக்கலையும் தழைத்தோங்கியது. குடைவரைக் கோவில், ஒற்றைக் கல் கோவில், கட்டுமானக் கோவில், புடைப்புச் சிற்பம் என நான்கு வகையாக சிற்பக்கலையைப் பகுக்கலாம்.

**திருத்தங்கல் தல வரலாறு** :

ஸ்ரீ தேவி, நீளாதேவி, பூமாதேவி ஆகிய மூவரிடையே தங்களில் யார் சிறந்தவர் என்றும் , பெருமாள் யாரிடம் அதிகம் பிரியமோடு இருப்பார் என்றும் விவாதம் ஏற்பட்டது . மற்ற தேவியர் விவாதத்தில் ஈடுபட்டிருக்க, ஸ்ரீ தேவி பூமியில் இறங்கி பக்தியுடன் அமர்ந்து தவம் செய்தார் . அவரது பக்தியால் மகிழ்ந்த விஷ்ணு இந்த தங்கால் மலையில் தங்கியதால், திருத்தங்கல் என்ற பெயர் பெற்றது . கிருஷ்ணர் - ருக்மணி அவர்களுடைய பேரனான அனிருத்தனுக்கும் உஷைக்கும் இந்த இடத்தில் திருமணம் நடைபெற்றதாக மற்றொரு புராணம் கூறுகிறது.



**ஸ்ரீ நின்ற நாராயணப் பெருமாள் கோவில்** :

ஸ்ரீ நின்ற நாராயணப் பெருமாளை மூலவராக கொண்ட, 600 ஆண்டுகள் பழமை வாய்ந்த இக்கோவில் திருமங்கையாழ்வாராலும் , பூதத்தாழ்வாராலும் மங்கலசாசனம் செய்யப்பட்டது. இக்கோவில் திராவிட கட்டிடக்கலைப் பாணியில் கட்டப்பட்டுள்ளது. இந்த கோவில் பாண்டிய மன்னன் தேவேந்திர வல்லபனால் கட்டப்பட்டது . தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத்துறையால் பராமரிக்கப்படும் கோவில்களில் ஒன்று. மற்ற கோவில்களைப் போல் இக்கோவிலில் ராஜகோபுரம் கிடையாது. இக்கோவிலில் கலைநயமிக்க மண்டபங்கள், அழகிய வடிவ சிற்பங்கள், பல நூறு ஆண்டு பழமையான மூலிகை ஒவியங்கள் கண்களுக்கு விருந்தளிக்கும் வகையில் அமைந்துள்ளது. இக்கோவிலில் மூன்று கட்டு உள்ளது.



1. **முதல் கட்டு :**

பிரதான நுழைவாயிலின் தெற்குபுறமாக நீண்ட நெடிய படிக்கட்டுகள் அமைந்திருக்கிறது. படிகள் கடந்து நுழைகையில் அழகிய சிற்ப தூண்களுடன் விசாலமான பரந்து விரிந்த திருக்கல்யாண மண்டபம் அமைந்திருக்கிறது. இந்த மண்டபத்தின் முகப்பில் உள்ள அழகான சித்திரங்கள் பார்வையாளருடைய கண்களுக்கு விருந்தாக அமைகிறது. இம்மண்டபத்தின் மேற்கே உள்ள குடைவரைக் கோயில் [Rock cut architecture) பாண்டியர் காலத்துக் கட்டிட அமைப்பை நினைவில் நிறுத்துகிறது. இந்த தளத்தில் தான் புரூரவ சக்கிரவர்த்தியின் சிலையும், அழகிரிக் கோனின் சிலையும் தேவியர்களுடன் யோகசயன கோலத்தில் ரங்கநாதனின் சிலையுருவமும் அமைந்திருக்கிறது.

2. **இரண்டாம் கட்டு :**

இரண்டாம் தளத்தின் நுழைவாயிலில் நான்கு கால் மண்டபமும் அதனைத் தொடர்ந்து மலைக்கட்டில் அருணகமல மகாதேவி என்னும் செங்கமல நாச்சியார் சந்நிதி உள்ளது. மற்ற கோவில்களில் நாச்சியார் அமர்ந்த கோலத்தில் காட்சி அளிப்பார். ஆனால் இந்த ஸ்தலத்தில் மட்டும் தான் நின்ற திருக்கோலத்தில் தரிசனம் தருகிறார். திருமங்கையாழ்வாருக்கும் இராமாநுஜருக்கும் தனித்தனி சந்நிதிகள் உள்ளது. ஒவ்வொரு வெள்ளியிலும் தாயாருக்கு சுக்கிரவாரக்கொரட்டில் சிறப்பு ஊஞ்சல் வைபவம் நடைபெறுகிறது . இவைமட்டுமின்றி இந்த தளத்தில் திருவோண மண்டபமும், வாத்திய மண்டபமும் , மணவாள மாமுனிகளின் சந்நிதியும் உள்ளது . ஸ்ரீ இராமாநுச தாஸரால் மிக நேர்த்தியாக கட்டப்பட்ட மரக்கொட்டகை உள்ளது. அவரை கவுரவப்படுத்தும் விதமாக அவருக்கு ஒரு சிலை ஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளது .

3. **மூன்றாம் கட்டு :**

இரண்டாம் கட்டை தாண்டி மேலே வந்தால் பெருமாளின் மகாமண்டபத்தை அடையலாம். இங்கிருக்கும் பெருமாள் சந்நிதிக்கு நேர் எதிராக கருடன் காட்சியளிக்கிறார். எங்கும் இல்லாதது போல் இங்கு கருடன் தமது வலது கையில் அமுதகலசமும், இடது கையில் சர்ப்பமும் தரித்திருக்கிறார். இங்கிருக்கும் ஏகாதசி மண்டபத்தில் ஒவ்வொரு மாதப்பிறப்பிலும், வைகுண்ட ஏகாதசியிலும் தாயாருடன் திருமஞ்சனம் கண்டருள்வார். அங்குள்ள கருவறையில் 11 திருவுருவங்களுடன் பெருமாள் அருள் பாளிக்கிறார். மூலவரின் வலதுபக்கம் மார்க்கண்டேயனும், கருடனும், அருணனும், விஷ்வகர்மாவும் , ஸ்ரீதேவி , பூதேவியும் இடதுபுறமாக ஜாம்பவதியும், உஷையும், அநிருத்தனும் , பிருகுமகரிஷியும் தரிசனம் தருவர். மூலவருக்கு முன் பஞ்ச மூர்த்திகளும், விமானச் சுற்றில் தாண்டவக்கண்ணனும் ஆண்டாளும் எழுந்தருளியுள்ளனர். பெருமாளின் கர்ப்பகிரக மோச்சந்த விமானம் திருவரங்கம் , அழகர்

கோவில் இவைகளில் உள்ள விமானம் போல் இருக்கும். விமானத்தை சுற்றி கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. .

**கோயிற்சிற்பங்கள்** :

கருவறை, பிற அறை, கோபுரங்கள் , தூண்கள் , சுவர்கள் , விமானம் ஆகிய இடங்களில் சிற்பங்கள் காணப்படுகின்றன. சிற்பங்கள் வழிபாடு நோக்கிற்காக மட்டுமின்றி அழகிற்காகவும் நிறுவப்படுகிறது. சிற்பங்கள் பல்வேறு தன்மைகளை வைத்து பகுக்கப்படுகின்றன . 1) இடப்பெயர்சி ( இடம் பெயர்க்க கூடியவை , பெயர்க்க இயலாதவை) 2) கட்புலனாதல் (கண்டவர் கண்களுக்கு புலனாகக் கூடியவை , கண்களுக்கு புலனாகாதவை) 3) பரிமாணம் (முப்பரிமாணம் தெரியும்படி அமைக்கப்பட்டவை , முன்புறம் மட்டும் தெரிபவை, ஒவியமாக அமைந்தவை) 4) செய்பொருள் (கல், உலோகம், சுதை ). திரு நின்ற நாராயணப் பெருமாள், ஸ்ரீதேவி, பூமிதேவி. நீளாதேவி, சாம்பவதி , உஷை – அநிருத்தன் , கருடாழ்வார் போன்ற உருவங்கள் கருவறையின் உள்ளேயும், ரெங்கநாதர், செங்கமலநாச்சியார்,ஆழ்வார் ஆகியவை கருவறைக்கு வெளியேயும் உள்ள உருவங்கள் ஆகும்.



**திரு நின்ற நாராயணப் பெருமாள்** :

10 அடி உயரமுள்ள இந்த சிலையானது கிழக்கு திசையினை நோக்கியுள்ளது. பெருமாள் தலையில் கிரீட மகுடமும், மகர குண்டலங்களும் உள்ளன. 3 இழைகளாலாகிய அறுந்த பூணூலையும் கழுத்தில் வைஜயந்தி மாலையையும் அணிந்திருக்கிறார். இக்கோவிலில் உள்ள மூலக்கடவுளைப் பற்றியும் அதன் உருவத்தை பற்றியும் குறிக்கும் முக்கிய கல்வெட்டுகளும் நூல்களும் உள்ளன. “திருவேங்கடநிலை பெருமானடிகள்” என்ற பெயர், மாறஞ்சடையன் காலக் கல்வெட்டிலும் (கி.பி 800) , முதலாம் பராந்தகன் கால கல்வெட்டிலும் (கி.பி 927) உள்ளது. இரண்டாம் பாண்டியப் பேரரசு காலக் கல்வெட்டுகளில் திருத்தங்கல் திருமலை மேல் நின்றருளின பரமசுவாமிகள் என்ற பெயரும் , நின்ற நாராயணன் என்ற பெயரும் இடம்பெற்றுள்ளது. இக்கல்வெட்டுகளின் மூலம்

தொடக்க காலத்திலிருந்தே பெருமாள் நின்ற கோலத்தில் இருப்பதாகவும், இந்த சிலை ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த சிலை என்றும் தெளிவாக அறியமுடிகிறது. உருவத்தினுடைய, வலது பக்கமாக செல்லும் பூணூல், தோள் வளைகள் போன்ற பல கூறுகளை வைத்து இது விசயநகரப் பேரரசு காலச் சிற்பங்களுக்கு உரியவை என்று நாம் அறிந்துக்கொள்ளலாம். கல்வெட்டுச் செய்திகள், உருவ அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இந்த சிலை ( சுதை பூசப்பெற்றது ) கி.பி 14 அல்லது 15 நூற்றாண்டைச் சார்ந்தது என அறியலாம்.



**தேவியர் நால்வர்**:

பொதுவாக பெருமாள் இரண்டு தேவியருடன் விளங்குவது இயல்பு. ஆனால் இந்த இடத்தில் மட்டும் பெருமாளுக்கு இடப்புறத்தில் பூமிதேவியும் சாம்பவதியும் வலப்புறத்தில் ஸ்ரீ தேவியும் நீளாதேவியும் உள்ளனர் . தேவியர் காது அணிகலன்கள், உடம்பு மேலாடை, கைகளில் உள்ள மலர்கள் ஆகியவற்றை வைத்து அவை விசயநகர காலத்தை சேர்ந்தது என அறிந்துகொள்ளலாம்.

**ஸ்ரீ தேவி :**

தாயாரின் சிலையில் உடலில் இடுப்பிலிருந்து கணுக்கால் வரை நீண்ட ஆடையுள்ளது. தேவியின் தலையில் சிறிய கிரீடமும் காதுகளில் பத்ர குண்டலம் , முன் கைகளில் கடக வளையல்கள், பின் கைகளில் மணிகளாலான வளையல் உள்ளது.

**நீளா தேவி :**

நீளா தேவி உருவத்தின் இடது கரத்தில் உள்ள தாமரை மலரின் இதழ்களினின்றும் அமைப்பால் வேறுபட்டுள்ளன. ஸ்ரீ தேவி உருவத்தின் வலப்பக்கத்தே ஸ்ரீதேவி உருவத்தை ஒத்த தோற்றத்துடன் நீளாதேவி உருவம் உள்ளது.


**பூமிதேவி :**

பெருமாளின் திருவுருவத்தையடுத்து உள்ள பூமிதேவியின் இரு கரங்களிடத்தும் வளையல்களை முன் கையிலும் வங்கிகளைப் பின் கையிலும் அணிந்துள்ளார். இடது கரத்தைத்

தொங்க விட்டும் வலது கரத்தில் அல்லி மலரையும் ஏந்தியுள்ளார்.

**சாம்பவி தேவி :**

பூமிதேவி உருவத்தின் இடப்பக்கத்தில் உள்ள சாம்பவதி, தாடங்கம் என்னும் வட்டமான அணிகலன்களை காதுகளில் அணித்துள்ளார். இவரின் உருவம் மஞ்சள் நிறத்தில் காணப்படுகிறது .



**<u>செங்கமலநாச்சியார்</u>**

இக்கோவிலில் தனியறைப் பெற்ற செங்கமலதாயாரின் சிலை 7 அடி உயரமுடையதாகவும், கிழக்கு நோக்கி நின்ற நிலையில் காணப்படுகிறது. தாயாரின் தலையில் கரண்ட மகுடமும் ; கண்கள், காதுகள், கணுக்கால், காற்பாதங்கள் ஆகிய நான்கிலும் உலோகத் தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன. ஆதலால் காண்பவர்களுக்கு உருவத்தின் கண் பார்வையும் காதில் உள்ள அணிகலன்களும் தென்படவில்லை. இவரின் உருவம் தாமரை மலர்ப்பீடத்தில் (பத்ம பீடம்)நிற்கின்றது. தாயாரின் வலது கரம் அபய முத்திரையிலும் இடது கரம் பொருளொன்றைப் பற்றிக்கொள்வது போல் தாழ்ந்த நிலையில் விரல்கள் அமையப்பெற்றது. இவ்வாறான நிலையில் உருவமைப்புகளை கொண்டுள்ள நாச்சியாரின் சிலை மதுரை நாயக்கர் காலச் சிற்பங்களை நினைவூட்டுகின்றன. எனவே இச்சிலை கிபி 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பதை அறிந்து கொள்ளலாம்.



<u>கருடாழ்வார்</u> :

வடக்கு நோக்கி , ஐந்தடி உயரத்தினையும், மஞ்சள் நிறத்தினையும் உடைய இச்சிலை பெருமாளின் ஏவலுக்காக காத்திருக்கும் அடியன் போல் பணிவான தோற்றத்தினையுடையது. சிலையின் கடைவாயின் இரு மருங்கிலும் கோரைப் பற்களும் கழுத்தில் படமெடுத்த பாம்பு ஒன்று சுற்றிய நிலையில் உள்ளது.

கருவறைக்கு வெளியே உள்ள கருடாழ்வார் மண்டபத்தில் காணப்படும் மற்றொரு சிலையில்; கழுத்து, தோள்கள், முன்கைகள் ஆகியவற்றில் பாம்புகள் -அணிகலன்களாக உள்ளன. இங்கு உள்ள சிலையில் காணப்படும் நான்கு கரங்களில் கீழிரு கரங்கள் வணங்கிய நிலையில் (அஞ்சலி முத்திரை) .

மேலிரு கரத்தில், வலது புறத்தில் அமுத கலசத்தினையும், இடது புறத்தில் படமெடுத்த நிலையிலுள்ள வாசுகி பாம்பினையும் கத்திரிக்கோலின் அலகுகள் போன்று விரலமைப்பைக் கொண்டுள்ளது. தனக்கு எதிரியான வாசுகி பாம்பை நண்பனாக ஏற்று தன் கையில் ஏந்தியிருப்பது இத்தலத்தில் மட்டுமே.

**<u>புரூரவ சக்கரவர்த்தி:</u>**

இம்மன்னன் நின்ற நாராயணப் பெருமான் கோயிலை அமைத்ததாக கல்வெட்டுகள் கூறுகின்றன. அதுமட்டுமின்றி அந்த மன்னனின் தவப்பயனாக நாராயணர் அங்கேயே தங்கி விட்டதாகத் தலபுராணம் கூறுகிறது. மன்னனின் இடது கையில் கேடயம் உள்ளது. மேலே சட்டையும், மார்புச் சட்டையின் மேல் பெருக்கல் குறியீடு உள்ளது .

<u>பிற உருவங்கள்</u> :

**1.கருநெல்லிநாதர் :**

கருவறையில் இலிங்க விடிவில் உள்ள கருநெல்லிநாத சுவாமியின் உயரம் சுமார் நான்கடியாகும். இக்கோவிலின் தலமரம் கருநெல்லிமரம் ஆகையால் இந்த லிங்கம் கருநெல்லிநாத சுவாமி என்ற பெயரைப் பெற்றது. இந்த சுயம்புலிங்கத்தின் ஆவுடையார்ப் பகுதியின் நீலமும் அகலமும் மூன்று மூன்று அடிகளாகும். உயரம் சுமார் 1½ அடியாகவும் உள்ளது. சிறப்புக் காலங்களில் வெள்ளியில் செய்யப்பட்ட நாகர் உருவம் இலிங்கத்தின் பின்புறம் இணைக்கப்படும்.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**2.கல்யாண முருகன்:**

இக்கோயிலில் உள்ள முருகன் உருவத்தின் இரு பக்கங்களிலும் தேவியர் உருவங்களைப் பார்க்கலாம் , வலது புறம் வள்ளியும், இடது புறம் தெய்வானையும் தனியான பீடங்களில் உள்ளனர். முருகன் உருவத்தின் பின்புறம் மயில் உருவம் இருக்கிறது.

**3.விநாயகர்.:**

2 அடி உயரமுடையது. இந்த சிலையின் தலையில் கரண்ட மகுடம் உள்ளது . உருவத்தின் யானை முகத்திற்கு பொருத்தமாக பெரிய கண்களும் காதுகளும் உடையது. உருவத்தின் கழுத்தில் நீண்ட துதிக்கைகள் உள்ளன. விநாயகர் உருவத்தின் முன்புறத்தில் அரையடி உயரமுள்ள எலி உள்ளது.

**4.ஆழ்வார். :**

ஆழ்வார் பன்னிருவரின் சிலை. அவற்றுள் திருமங்கை ஆழ்வாரின் சிலை காலத்தால் பழமையானது. இவ்வுருவம் முதலாம் பாண்டியர், கி.பி 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று சந்திரமூர்த்தி காட்டியுள்ளார். ஆண்டாள் கழுத்தில் நிறைய அணிகலன்கள், கணுக்கால் வரை பட்டு ஆடை ஆகியவை அணிந்திருக்கிறார். அவையனைத்தும் விஜயநகர கால சிறப்பு. எனவே அச்சிலை கி.பி 15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனக் கூறலாம்.

**முடிவுரை**:

108 திவ்ய தலங்களில் ஒன்றான திரு நின்ற நாராயணப் பெருமாள் கோவிலைப் பற்றி சிலப்பதிகாரத்திலும், மைசூர் நரசிம்மர் ஆலயத்திலும் கூறப்பட்டுள்ளது . வைணவ, சைவ சமயங்களின் ஒற்றுமைச் சின்னமாக இக்கோவில் விளங்குகிறது. விருதுநகர் மாவட்டம் திருத்தங்கலில் உள்ள இந்த தொன்மையான கோவிலில் வேண்டி வணங்கினால் திருமணத் தடை நீங்கும் என்பது நம்பிக்கை. இவ்வாறான பல ஆத்மபூர்வமான செய்திகளை இக்கட்டுரையின் மூலம் அறிந்தோம் .

**மேற்கோள்கள் :**

1.கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும் மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும் கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை பத்தே சிற்பத் தொழிற்கு உறுப்பாவன- திவாகர நிகண்டு

**துணை நூற்பட்டியல் :**

1. T.A Gopinatha rao , elements of Hindu iconography, Vol 1 Part 1 ,P .18
1. Genealogy of the south Indian goods , P 43
2. திருத்தங்கல் ஸ்தல புராண வசனம், பக், 20-22
3. திருத்தங்கல் தல வரலாறு, பக், 25-29
4. திருத்தங்கல் பகுதியில் தொல்லியல் ஆய்வுகள், 2022 P.17
5. Edward Moor, The Hindu pantheon, P.135.
6. G. Jouveau dubreuil , Iconography of southern India
7. S. Kalpana desai , iconography of Vishnu, P.15

8. https://temple.dinamalar.com
9. https://divyadesamtempl
10. https://www.vikatan.com
11. https://www.dailythanthi.com
12. https://www.tamilsangamam.in/2018/04/blog-post_13.html
13. https://www.tsrtnpscacademy.com/2021/07/Sirpakkalai.html
14. http://mymintamil.blogspot.com/2019/11/blog-post_16.html?m=1
15. https://tamil.hindustantimes.com